ABSTRACT

Forests – Wood Based Industries (Establishment and Regulation) Guidelines, 2016 - Amendment to Tamil Nadu Regulation of Wood Based Industries Rules, 2010 – Orders issued.

---

**ENVIRONMENT & FORESTS (FR.13) DEPARTMENT**

**G.O.(Ms) No:16** **Dated: 07.02.2020**

திருவள்ளுவர் ஆண்டு – 2051
விகாரி , தை – 24

**Read:**

1. G.O.(Ms) No.156, Environment and Forests(FR-13) Department, dated:21.10.2010.
2. G.O.(Ms) No.79, Environment and Forests (FR-13) Department, dated:23.07.2015.
3. Government of India, Ministry of Environment and Forest and Climate Change(SU Division) F.No.3-3/2015- SO(Vol-IV) dated:18.09.2017.
4. From the Principal Chief Conservator of Forests, Chennai Letter No.WR4/4243/2016, dated: 27.05.2019, 27.08.2019 and 20.11.2019.

-------

**ORDER :**

In the G.O first read above orders were issued framing the Tamil Nadu Regulation of Wood Based Industries Rules, 2010.

2. In the letter third read above, Government of India has stated that the Amendment in Wood Based Industries (Establishment and Regulation) Guidelines, 2016 have been published in the Gazette of India.

3. In the letter 4th read above, the Principal Chief Conservator of Forests has requested for relevant amendments in Tamil Nadu Regulation of Wood Based Industries Rules, 2010.

4. After careful examination, the Government accept the proposal of Principal Chief Conservator of Forests and accordingly amend the relevant portions of the Tamil Nadu Regulation of Wood Based Industries Rules, 2010 and direct that the notification appended to this order will be published in the Tamil Nadu Government Extraordinary Gazette. Six copies of the notification are to be sent to the Tamil Development (Translation) and

...2.

Information Department. That Department is requested to send Tamil version of the notification to the Government Press for publication. On receipt of Tamil version, the Works Manager, Government Central Press is requested to publish the Tamil version.

(BY ORDER OF THE GOVERNOR)

**SHAMBHU KALLOLIKAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

To
The Principal Chief Conservator of Forests
(Head of Department), Chennai-15.
The Works Manager,
Government Central Press, Chennai-79.
[He is requested to send 50 copies of
Notification to the Government and 500 copies to the
Principal Chief Conservator of Forests (HoD) Chennai-15]
All District Collectors / All Conservators/
District Forest Officers (through the PCCF(HoD) Ch-15).
The Registrar, High Court of Madras, Chennai-104.
The Tamil Nadu Legislative Assembly, Chennai-9.
The Law Department, Chennai-9.
The Tamil Development (Translation) and Information Department,
Chennai-9 (6 copies) (for Tamil translation of the Notification)
The Special Personal Assistant to Hon'ble Minister (Forests) /
Hon'ble Minister (Law, Courts & Prison), Chennai-9.
The Private Secretary to Principal Secretary to Government,
Environment and Forests Department, Secretariat, Chennai – 9.
SF/SC.

/ FORWARDED BY ORDER /

10/02/202

SECTION OFFICER

10/02/2020

APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred by section 26 read with sections 35 and 63 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Tamil Nadu Regulation of Wood Based Industries Rules, 2010.

## AMENDMENTS.

In the said Rules ,-

(1) in rule 2, in sub-rule (1) ,-

(i) in clause (a), for the expression "Conservator of Forests" the expression "Conservator of Forests or the Chief Conservator of Forests or the Additional Principal Chief Conservator of Forests" shall be substituted;

(ii) after clause (d), the following clause shall be inserted, namely;-

"(d–a) "Industrial Estate" means areas notified by the Government for establishment of wood based industries." ;

(iii) for clause (g), the following clause shall be substituted, namely :-

"(g) "Principal Chief Conservator of Forests" means the Principal Chief Conservator of Forests (Head of Department) Tamil Nadu" ;

..4..

(iv) after clause (g) as so substituted, the following clauses shall be inserted, namely:-

"(g–a) "Round log" means a piece of wood in its natural form, having mid girth of thirty centimetre or more under bark and it includes such round log even after its bark has been removed or its surface has been dressed, manually or by using a band saw or any other machine or equipment to make its cross section square or near-square for the purpose of ease in its transportation and/or storage;

(g–b) "Saw Mill" means plants and machinery in a fixed structure or enclosure, for conversion of round logs into sawn timber;

(g–c) "Sawn Timber" means beams, scantlings, planks, battens and such other product obtained from a sawing of a round log;

(g–d) "Committee" means the state level committee constituted under rule 3 – A of these rules.";

(v) for clause (h), the following clause shall be substituted, namely :-

**"(h)** "Wood based industry" means any industry which processes wood as its raw material (Saw mills/ Veneer/ Plywood/ or any other form such as sandal, Katha wood, etc)";

(2) to rule 3, the following provisos shall be added, namely :-

"Provided that the following industries or processing plants not using round logs of domestic origin or operating without a band saw or re-saw or circular saw of more than thirty centimetre diameter shall not require licence, namely:-

**Industries or processing plants which use,-** (a) sawn timber, cane, bamboo, reed, plywood, veneers or imported wood, procured from legitimate sources;

(b) black board, medium density fibreboard or similar wood-based products, procured from legitimate sources;

(c) round log or timber from species declared as agro-forestry or agricultural crops and/or exempted from the purview of the felling and transit regime in Tamil Nadu and procured from legitimate sources:

Provided further that the Committee may allow installation of circular saw of diameter upto 60 centimetre in such industries having specialized requirement. Such industries shall be registered with the Tamil Nadu Forest Department and shall be regulated as per the norms prescribed by the Government.

**(3) after rule 3, as so amended, the following rules shall be inserted, namely :-**

" **3-A State Level Committee .-** (1) The Government shall constitute a State Level Committee to perform the functions stipulated under rule 3 – B.

..5..

(2) The Committee shall consists of the following :-

| | | |
|---|---|---|
| (i) Principal Chief Conservator of Forests (Head of Department), Tamil Nadu | : | Chairperson |
| (ii) A representative of the Regional Office of the Ministry of Environment, Forest and Climate Change | : | Member |
| (iii) A representative of the Tamil Nadu Forest Department not below the rank of a Conservator of Forests dealing with preparation of Working Plans or Working Schemes | : | Member |
| (iv) Director or the Additional Director of Industries | : | Member |
| (v) A representative of the Forest Development Corporation. | : | Member |
| (vi) An officer not below the rank of Conservator of Forests working in the Forest Head Quarters. | : | Member Secretary |

(vii) The Committee may co-opt an officer from Territorial wing of the Tamil Nadu Forest Department not below the rank of Conservator of Forests and officers from Department of Agriculture and Department of Revenue of the State of Tamil Nadu.

(3) The Committee shall meet at least once in three months.

(4) The quorum of the meeting shall be at least fifty percent of the Members, excluding the Chairman.

(5) The Committee shall invite one representative of the industry nominated by the saw-mill association as a special invitee to each and every meeting of the Committee.

3 - B. Powers and functions of the Committee.- The Committee shall perform the following functions, namely:-

(a) assess the availability of timber in the State by way of appropriate study on demand and supply as and when it decides and shall devise suitable mechanism for sustainable use of timber in a way that does not affect the forests of the area adversely.

(b) approve the name of wood based industries which may be considered for grant of fresh licence or enhancement of the existing licensed capacity in case the Committee is satisfied that timber is available legally for the said new Wood Based Industries, such as, trees outside forests, forests, etc;

(c) ensure that the amount lying with Tamil Nadu Forest Department as recovered from Wood Based Industries is utilized for the purpose of afforestation only.

(d) examine and make appropriate recommendations or any other matter referred by the Government to the Ministry of Environment, Forest and Climate Change.

**3 - C. Estimated annual consumption of timber by wood based industries.-** (1) (a) For the purpose of assessing the timber requirement of the saw mills, they may be divided into,-

(a) Saw mills upto 10 HP

(b) Saw mills between 10 HP and 20 HP

(c) Saw mills between 20 HP and 40 HP

(d) Saw mills between 40 HP and 60 HP and

(e) Saw mills above 60 HP

(b) The annual requirement of round log for saw mills of different capacities may be fixed by the Committee based on the technical data or as per the formula given below, namely:-

(i) Saw mills of 10 HP and below: 540 cu. mt. (base value) (vi)

(ii) Saw mills between 10 HP and 20 HP: 810 cu. mt. (1.5 time the base value)

(iii) Saw mills between 20 HP and 40 HP: 1080 cu. mt. (2 times of the base value)

(iv) Saw mills between 40 HP and 60 HP: 1620 cu. mt. (3 times of the base value)

(v) Saw mills above 60 HP: 2160 cu. mt. (4 times of the base value)

(2) The Timber requirement for various units as assessed by Indian Plywood Industries Research and Training Institute (IPIRTI), Bangalore is given in the **Annexure**." ;

(4) in rule 4 ,-

(i) sub-rules (1), (2) and (3) shall, respectively, be re-numbered as sub-rules (2), (3) and (4);

(ii) before sub-rule (2), as so re-numbered, the following sub-rule shall be inserted, namely :-

" (1) No licence to a wood based industry shall be granted without obtaining prior approval of the Committee" ;

(iii) after sub-rule (4), as so renumbered the following sub-rule shall be added namely:-

"(5) A Wood Based Industry can be established in an Industrial Estate or a Municipal area, irrespective of the aerial distance from the boundary of nearest notified forest or protected area";

(5) in rule 5, in sub-rule (2), after the expression "adverse impact on forests", the expression "and after the approval of the Committee", shall be inserted;

(6) in rule 6, for the expression "subject to the guidelines issued by the Principal Chief Conservator of Forests from time to time", the expression "subject to the approval of the Committee" shall be substituted ;

(7) in rule 11, after sub-rule (2), the following sub-rule shall be added, namely ;

"(3) The Licensing Officer shall permit the shifting of the unit only after the approval of the Committee" ;

(8) in rule 12,-

(i) for sub-rule (1), the following sub-rule shall be substituted, namely:-

"(1)(a) Any person who has been refused, (i) to grant of licence under rule 4; or (ii) renewal of licence under rule 5; or (iii) transfer of licence under rule 6, or (iv) shifting of wood based industry under rule 11,

..9 may within a period of sixty days from the date of the receipt of such order, prefer an appeal to the Government.

(b) Any person whose licence has been revoked under rule 10, may within a period of thirty days from the date of receipt of such order, prefer an appeal to the Conservator of Forest or the Field Director of Tiger Reserve, as the case may be.";

(ii) in sub-rule (2), for the expression "the Conservator of Forest or the Field Director of Tiger Reserve", the expression "the Government or the Conservator of Forest or the Field Director of Tiger Reserve, as the case may be," shall be substituted;

(iii) in sub-rule (3), for the expression "the Conservator of Forest or the Field Director of Tiger Reserve", the expression "the Government or the Conservator of Forest or the Field Director of Tiger Reserve, as the case may be," shall be substituted;

(9) after form-IV, The following Annexure shall be added at the end, namely:-

**"ANNEXURE**

**Assessment of Timber Requirement**

**[See rule 3-C(2)]**

The Indian Plywood Industry Research and Training Institute(IPIRTI), Bangalore an autonomous body under the Ministry of Environment, Forest and Climate Change has assessed the timber requirement per unit for peeling length of 4 feet and 8 feet size in the plywood / veneer units as 5 cu.mt. and 11 cu.mt. respectively per day on an average of 8 working hours per day. By assuming that the peeling units work for 8 hours per day on an average for 300 days in a year, the normal timber requirement of the peeling length of 4 feet size in veneer units is 1500 cu.mt. The total timber requirement for the stand alone veneer units may be assessed by calculating the equivalent number of 4 feet length machines and by taking its normal installed capacity as 1500 cu.mt. per annum.

..11..

The timber requirement of a plywood unit may be taken as 'nil' on the ground that the round timber is used as timber in the veneer units only and that the plywood units are the secondary users which use the veneer as the raw material produced by the veneer units. The plywood units use presses of various sizes such as 8x4x6, 8x4x12, 8x4x15, 4x4x7, 4x4x10.A, 8x4x10 capacity press can produce upto 10 plywood pieces of 8'x4' size per hour whereas a 8x4x15 capacity press can produce upto 15 plywood pieces of 8'x4' size per hour and so on. The normative installed capacity of the plywood units will accordingly depend upon the number and the type of presses. This number and type of presses installed in each of the plywood unit may be assessed and thereafter equivalent number or presses of 8x4x10 capacity may be calculated. The normative annual timber requirement for a integrated plywood unit having a 8x4x10 capacity press may be taken as 2000 cu.mt. per annum, and accordingly the total requirement of timber for the plywood units should be calculated.".

**SHAMBHU KALLOLIKAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

10/02/2020

Section Officer

10/02/2020

©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 13] சென்னை, புதன்கிழமை, மார்ச் 25, 2020
பங்குனி 12, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

#### சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

*[அரசாணை (நிலை) எண் 16, சுற்றுச்சூழல் மற்றும் வன(FR13)த் துறை, 7 பிப்ரவரி 2020.]*

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் (5/1882) 26–ஆம் பிரிவு, 35 மற்றும் 63 ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2010–ஆம் ஆண்டு மரம் சார்ந்த தொழிற்சாலைகளை முறைப்படுத்தும் விதிகளில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

#### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,–

(1) விதி 2 ஆம் விதியைச் சேர்ந்த துணை–விதி (1)-இல்,–

(i) பகுதி (a)-இல், "வன பாதுகாவலர்" என்ற சொற்றொடருக்கு பதிலாக "வன பாதுகாவலர் அல்லது தலைமை வன பாதுகாவலர் அல்லது கூடுதல் முதன்மை தலைமை வன பாதுகாவலர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்;

(ii) பகுதி (d)-க்குப் பின்னர், பின்வரும் பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது;–

"(d-a) "தொழிற்பேட்டை என்பதற்கு மரம் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக அரசால் அறிவிக்கையிடப்பட்ட பகுதிகள் என பொருள்படும்.";

(iii) பகுதி (g)–க்கு பதிலாக பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(g) "முதன்மை தலைமை வன பாதுகாவலர்" என்பதற்கு தமிழ்நாடு முதன்மை தலைமை வன பாதுகாவலர் (துறைத் தலைவர், என பொருள்படும்";

(iv) பகுதி (g)–க்கு பின்னர், மாற்றியமைக்கப்பட்டவாறு, பின்வரும் பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

"(g-a) "உருளை மரக்கட்டை" என்பதற்கு இயற்கையாகவே மரப்பட்டையின் கீழ், மைய பகுதியில் முப்பது சென்டிமீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட சுற்றளவு உடைய வெட்டு மரத்துண்டு என பொருள்படும். மரப்பட்டை உரிக்கப்பட்ட அல்லது எளிதாகக் கொண்டுச் செல்வதற்காக மற்றும் / அல்லது சேமித்து வைப்பதற்காக தொழிலாளர்களைக் கொண்டு அல்லது பற்கள் போன்ற அமைப்பைக் கொண்ட மின்சாரத்தால் இயங்கும் எஃகு பட்டிவாள் அல்லது ஏனைய யாதொரு இயந்திரம் அல்லது சாதனத்தைக் கொண்டு அம்மரத்துண்டின் குறுக்குப் பகுதியை சதுரமாக அல்லது ஓரளவு சதுர வடிவில் மாற்றியமைக்கப்பட்ட அத்தகைய உருளை மரக்கட்டைகளும் இதில் அடங்கும்;

"(g-b) "மரம் அறுக்கும் ஆலை" என்பதற்கு உருளை மரக்கட்டைகளை அறுக்கப்பட்ட மரக்கட்டைகளாக மாற்றுவதற்காக, நிர்ணயிக்கப்பட்ட வடிவில் அல்லது இணைப்பில் உள்ள கருவிகள் மற்றும் தளவாடங்கள் என பொருள்படும்;

"(g-c) "அறுக்கப்பட்ட மரக்கட்டைகள்" என்பதற்கு உருளை மரக்கட்டைகளை அறுப்பதன் வாயிலாக பெறப்பட்ட தூலங்கள், குறிப்பிட்ட அளவில் வெட்டப்பட்ட மரத்துண்டுகள், பலகைகள், மரச்சட்டங்கள் மற்றும் இவை போன்ற ஏனைய பொருள்கள் என்று பொருள்படும்;

"(g-d)''குழு'' என்பதற்கு இந்த விதிகளின் 3–A ஆம் விதியின் கீழ் அமைக்கப்பட்ட மாநில அளவிலான குழு என பொருள்படும்:-

(v) பகுதி (h)–க்கு பதிலாக பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:-

"(h) ''மரம் சார்ந்த தொழிற்சாலை'' என்பதற்கு மரத்தை மூலப்பொருளாகக் கொண்டு செயல்படும் யாதொரு தொழிற்சாலை (மரம் அறுக்கும் தொழிற்சாலைகள்/ஒட்டு மென்பலகை/ஒட்டு பலகை/ அல்லது சந்தனம், கதா வகை வெட்டு மரக்கட்டைகள் (katha wood) முதலியவை போன்ற ஏனைய யாதொரு வடிவம்) என பொருள்படும்";

**(2) விதி 3–இல், பின்வரும் வரம்பு நிபந்தனைகள் சேர்த்துக்கொள்ளபட வேண்டும், அவையான:**

"இருப்பினும், உள்நாட்டு உருளை மரக்கட்டைகளை பயன்படுத்தாத அல்லது முப்பது செண்டிமீட்டருக்கு அதிகமான விட்டமுடைய பட்டிவாள் அல்லது வெட்டு எந்திரம் அல்லது வட்ட இரம்பம் இன்றி செயல்படுகிற பின்வரும் தொழிற்சாலைகள் அல்லது செயல்பாட்டு இயந்திரங்களுக்கு உரிமம் தேவையில்லை, அதாவது:-

**பின்வருவனவற்றை பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அல்லதுசெயல்பாட்டு இயந்திரங்கள்,**

(a) முறையான வழியில் பெறப்பட்ட அறுக்கப்பட்ட மரக்கட்டை, பிரம்பு, மூங்கில், நாணல், ஒட்டு பலகை, ஒட்டு மென்பலகை அல்லது இறக்குமதி செய்யப்பட்ட வெட்டு மரத்துண்டுகள்;

(b) முறையான வழியில் பெறப்பட்ட கரும்பலகை, நடுத்தர அடர்த்தியுடைய நார் பலகை அல்லது அதுபோன்ற மரம் சார்ந்த பொருட்கள்;

(c) வேளாண் காடு வளர்ப்பு அல்லது வேளாண்மை பயிர்களாக அறிவிக்கப்பட்ட மற்றும்/அல்லது தமிழ்நாட்டில் மரம் வெட்டி ஏற்றிச் செல்லக்கூடிய பகுதிக்கான வரம்பெல்லையிலிருந்து விலக்களிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மர வகைகளிலிருந்து மற்றும் முறையான வழியில் பெறப்பட்ட உருளை மரக்கட்டை அல்லது மரக்கட்டை

ஆயினும், குறிப்பிட்ட சிறப்பு தேவையுடைய அத்தகைய தொழிற்சாலைகளில் 60 செண்டிமீட்டர் வரையிலான விட்டமுள்ள வட்ட இரம்பம் நிறுவுவதை குழு அனுமதிக்கலாம் என வகைசெய்யப்பட்டுள்ளது. அத்தகைய தொழிற்சாலைகள் தமிழ்நாடு வனத்துறையிடம் பதிவு செய்திருக்க வேண்டும். மேலும், அரசால் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படி முறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**(3) விதி 3–க்கு பின்னர், திருத்தம் செய்யப்பட்டவாறாக, பின்வரும் விதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அவையானவன:**

"3A **மாநில அளவிலான குழு.**–(1) விதி 3–B-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக, மாநில அளவிலான குழுவை அரசு அமைக்க வேண்டும்.

(2) குழு பின்வரும் நபர்களைக் கொண்டிருக்கும்:-

| | | |
|---|---|---|
| (i) | முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (துறைத் தலைவர்), தமிழ்நாடு | : தலைவர் |
| (ii) | வனம் மற்றும் பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் மண்டல அலுவலகத்தின் பிரதிநிதி | : உறுப்பினர் |
| (iii) | செயல்பாட்டு திட்டங்கள் அல்லது செயல்பாட்டு திட்டப்பணிகள் தயாரித்தலை கையாளும் வனப்பாது காவலர் பதவிதரத்திற்கு குறையாத பதவியிலுள்ள தமிழ்நாடு வனத்துறையின் பிரதிநிதி ஒருவர் | : உறுப்பினர் |
| (iv) | தொழில்துறையின் இயக்குநர் அல்லது தொழில்துறை கூடுதல் இயக்குநர் | : தலைவர் |
| (v) | வன மேம்பாட்டுக் கழகத்தின் ஒரு பிரதிநிதி | : உறுப்பினர் |
| (vi) | வனத்துறையின் தலைமையிடத்தில் பணிபுரியும் வனப்பாதுகாவலர்கள் பதவிதரத்திற்கு குறையாத பதவியிலுள்ள அதிகாரி ஒருவர் | : உறுப்பினர்/ செயலாளர் |

(vii) தமிழ்நாடு வனத்துறையின் மண்டலப் பிரிவிலிருந்து வனப்பாதுகாவலர்கள், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் பதவிதரத்திற்கு குறையாத பதவியிலுள்ள, ஒரு அலுவலரை (உறுப்பினரை) இக்குழு தேர்வு செய்யும்.

(3) குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது குழு கூட்டப்பட வேண்டும்.

(4) கூட்டத்தின் குறைவெண் வரம்பு, தலைவர் நீங்கலாக ஐம்பது விழுக்காட்டிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

(5) குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும், ஒரு சிறப்பு அழைப்பாளராக மரமறுக்கும் மர அறுவை ஆலை கூட்டமைப்பால் தொழில்துறைக்கு தேர்வு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதியை குழு அழைக்க வேண்டும்.

3-B குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்.– குழு பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் அவையாவன:-

(a) மரங்களின் தேவை மற்றும் வழங்கல் குறித்து உரிய ஆய்வினை மேற்கொள்வதன் வாயிலாக மாநிலத்தில் கிடைக்கப்பெறும் மரம் குறித்த மதிப்பீடு தொடர்பாக முடிவெடுக்கும் போது, வனப்பகுதிகள் பாதிக்கப்படாத வகையில் நீட்டித்த நிலையான மரம் பயன்பாட்டிற்கான உரிய ஏற்பாட்டு முறையை வகுக்க வேண்டும்.

(b) மேலே குறிப்பிட்ட புதிய வனம் சார்ந்த தொழிற்சாலைகளுக்காக, வனத்தின் வெளியிருந்தும், வனங்கள் முதலியவற்றிலிருந்தும் சட்டரீதியில் அத்தகைய மரங்கள் போதுமான அளவு கிடைக்கப்பெறுகின்றன என குழு கருதும் நேர்வில், உரிமம் வழங்கல் அல்லது தற்போதுள்ள உரிமத்தின் கால அளவை நீட்டிப்பதற்காக மரம் சார்ந்த புதிய தொழிற்சாலைகளின் பெயருக்கு ஒப்புதலளிப்பது குறித்துக் கருதிப்பார்க்கலாம்.

(c) மர அடிப்படையிலான தொழில்களிலிருந்து மீட்கப்பட்டவாறான தமிழ்நாடு வனத்துறையிடம் உள்ள அத்தகைய தொகை, காடுவளர்ப்பு நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

(d) சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திற்கு அரசால் குறிப்பிடப்பட்ட ஏனைய யாதொரு பொருண்மையையும் உரியவாறு ஆராய்ந்து பரிந்துரைக்கவும்.

3-C. மரம் சார்ந்த தொழிலகங்களால் பயன்படுத்தப்படும் மரங்கள், ஆண்டு தோறும் மதிப்பிடப்படுகிறது.–

(1) (a) மரம் அறுக்கும் ஆலைகளின் மரத் தேவைகளை மதிப்பிடும் நோக்கத்திற்காக, அவை பின்வருமாறு பிரிக்கப்படலாம்,–

(a) 10 குதிரைத்திறன் வரை மரம் அறுக்கும் ஆலைகள்

(b) 10 குதிரைத்திறனுக்கும் 20 குதிரைத்திறனுக்கும் இடையில் மரம் அறுக்கும் ஆலைகள்

(c) 20 குதிரைத்திறனுக்கும் 40 குதிரைத்திறனுக்கும் இடையில் மரம் அறுக்கும் ஆலைகள்

(d) 40 குதிரைத்திறனுக்கும் 60 குதிரைத்திறனுக்கும் இடையில் மரம் அறுக்கும் ஆலைகள்

(e) 60 குதிரைத்திறனுக்கும் மேல் மரம் அறுக்கும் ஆலைகள்

(b) தொழில்நுட்ப திறன்களின் அடிப்படையில் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பாடு அடிப்படையில், வெவ்வேறு திறன்களைக் கொண்ட மரம் அறுக்கும் ஆலைகளுக்கான உருண்டை வடிவிலான (round log) மரக்கட்டையின் ஆண்டுத் தேவைகள், குழுவால் நிர்ணயிக்கப்படலாம்.

(i) 10 குதிரைத்திறன் மற்றும் அதற்குக் குறைவான மரம் அறுக்கும் ஆலைகள்: 540 கன. சதுர மீட்டர் (அடிப்படை மதிப்பு)

(ii) 10 குதிரைத்திறனுக்கும் 20 குதிரைத்திறனுக்கும் இடையேயான மரம் அறுக்கும் ஆலைகள்: 810 கன. சதுர மீட்டர் (அடிப்படை மதிப்பில் 1.5 மடங்கு)

(iii) 20 குதிரைத்திறனுக்கும் 40 குதிரைத்திறனுக்கும் இடையிலான மரம் அறுக்கும் ஆலைகள் 1080 கன சதுர மீட்டர் (அடிப்படை மதிப்பின் 2 மடங்கு)

(iv) 40 குதிரைத்திறன் மற்றும் 60 குதிரைத்திறனுக்கு இடையிலான மரம் அறுக்கும் ஆலைகள்: 1620 கன சதுர மீட்டர் (அடிப்படை மதிப்பின் 3 மடங்கு)

(v) 60 குதிரைத்திறனுக்கு மேல் மரம் அறுக்கும் ஆலைகள்: 2160 கன சதுர மீட்டர் (அடிப்படை மதிப்பின் 4 மடங்கு)

(2) பெங்களூரிலுள்ள இந்திய ஒட்டுப்பலகை தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் (IPIRTI) மதிப்பிட்டு செய்யப்பட்ட பல்வேறு பிரிவுகளுக்கான மரத்தேவை பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

(4) விதி 4 இல்,–

(i) துணை விதிகள் (1), (2) மற்றும் (3) ஆகியவை, முறையே, துணை விதிகள் (2), (3) மற்றும் (4) என மீண்டும் மறு இலக்கமிடப்பட வேண்டும்;

(ii) துணை விதிக்கு (2) முன்னால், அவ்வாறு மீண்டும் இலக்கமிடப்பட்டவற்றில் பின்வரும் துணை விதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

"(1) குழுவின் முன் ஒப்புதல் பெறாமல் மரம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு எந்த உரிமமும் வழங்கப்படாது'';

(iii) துணை விதி (4)க்குப் பின்னர், நினைவில் கொண்டுள்ளபடி பின்வரும் துணை விதி சேர்க்கப்பட வேண்டும். அதாவது:-

''(5) அருகிலுள்ள அறிவிக்கையிடப்பட்ட வனம் அல்லது பாதுகாக்கப்பட்ட பகுதியின் எல்லையிலிருந்து வான்வழித் தூரத்தைப் பொருட்படுத்தாமல் ஒரு தொழிற்பேட்டையில் அல்லது ஒரு நகராட்சிப் பகுதியில் மரம் சார்ந்த ஒரு தொழிற்சாலை நிறுவப்படலாம்'';

(5) விதி 5-இல், துணை விதி-(2)இல், "வனங்களின் மீதான பாதகமான தாக்கம்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர்'' "மற்றும் குழுவின் ஒப்புதலுக்குப் பின்னர் என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்;

(6) விதி 6-இல், ''முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் அவ்வப்போது வழங்கப்பெறும் வழிகாட்டலுக்குட்பட்டு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "குழுவின் ஒப்புதலுக்குட்பட்டு'' "என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(7) விதி 11-இல், துணை விதி (2)-க்குப் பின்னர், பின்வரும் துணை விதி சேர்த்துக்கொள்ளப்படவேண்டும், அதாவது;

"(3) உரிமம் வழங்கும் அலுவலர், குழுவின் அனுமதி பெற்ற பின்னரே, தொழிற்சாலையை இடமாற்றம் செய்திட அனுமதி வழங்கவேண்டும்"

(8) விதி 12-இல்.–

(i) துணை விதி (1)-க்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக்கொள்ளப்படவேண்டும், அதாவது:-

"(1)(a) பின்வருவனவற்றுக்கு மறுக்கப்படுகிற யாதொரு நபர், அத்தகைய ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள், அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம் அவையாவன:-

(i) விதி 4-இன் கீழ் உரிமம் வழங்கல்; அல்லது (ii) விதி 5-இன் கீழ் உரிமம் புதுப்பித்தல்; அல்லது (iii) விதி 6-இன் கீழ் உரிமத்தை மாற்றம் செய்தல்; அல்லது (iv) விதி 11 இன் கீழ் மரம் சார்ந்த தொழிற்சாலையை இடமாற்றும் செய்தல்.

(b) விதி 10-இன் கீழ் எந்தவொரு நபரின் உரிமம் இரத்து செய்யப்படுமாயின், அத்தகைய ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், நேர்விற்கேற்ப வனப் பாதுகாவலர் அல்லது புலிகள் காப்பு வனத்தின் களப்பணி இயக்குநருக்கு மேல் முறையீடு செய்யலாம்.";

(ii) துணை விதி (2)-இல் "வனப் பாதுகாவலர் அல்லது புலிகள் காப்பு வனத்தின் களப்பணி இயக்குநர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "நேர்விற்கேற்ப அரசு அல்லது வனப்பாதுகாவலர் அல்லது புலிகள் காப்பு வனத்தின் களப்பணி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்படவேண்டும்;

(iii) துணை விதி (3)-இல் "வனப்பாதுகாவலர் அல்லது புலிகள் காப்பு வனத்தின் களப்பணி இயக்குநர்", என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "நேர்விற்கேற்ப அரசு அல்லது வனப்பாதுகாவலர் அல்லது புலிகள் காப்பு வனத்தின் களப்பணி இயக்குநர்", என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்படவேண்டும்;

(9) படிவம்-IVக்குப் பின்னர், பின்வரும் பிற்சேர்க்கை இறுதியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:-

## "பிற்சேர்க்கை

## மரத் தேவையின் மதிப்பீடல்

## [விதி 3-C(2)ஐக் காண்க]

பெங்களூருவிலுள்ள இந்திய பிளைவுட் தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (IPIRTI) என்பது இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவகால மாற்றங்கள் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பு, ஒட்டு பலகை/வெனீர் அலகுகளில் 4 அடி மற்றும் 8 அடி அளவு நீளம் தோலுரிக்க ஒரு யூனிட்டுக்கான மரத் தேவையை ஒரு நாளைக்கு முறையே 5 கன மீட்டர் மற்றும 11 கன மீட்டர் என மதிப்பிட்டுள்ளது. தோலுரிக்கும் தொழிலகங்கள் ஓராண்டில் சராசரியாக 300 நாட்கள் என ஒரு நாளைக்கு 8 மணிநேரம் வேலை செய்கின்றன என்று கருதுவதன் வாயிலாக, வெனீர் அலகுகளில் (4 அடி அளவுள்ள தோலுரிக்கும் நீளத்தின் சாதாரண மரத்தேவை 1500 கன மீட்டர் ஆகும். 4 அடி நீளத்திற்கான தோலுரிப்பதற்கான இயந்திரங்களுக்கு சமமான எண்ணிக்கை கணக்கிடுவதன் வாயிலாகவும், அதன் இயல்பான நிறுவு திறனை ஆண்டுக்கு 1500 கன மீட்டராக எடுத்துக்கொள்வதன் வாயிலாகவும் தனித்தனி வெனீர் அலகுகளுக்கான மொத்த மரத்தேவையினை மதிப்பிடலாம்.

வட்ட மரத்துண்டுகள் வெனீர் அலகுகளில் மட்டுமே பயன்படுத்தப்படுவதால் ஒரு ஒட்டுப்பலகை அலகிற்கு மரத்தேவை 'ஒன்றுமில்லை' என எடுத்துக்கொள்ளப்படலாம். மேலும் ஒட்டுப்பலகை அலகுகள் இரண்டாம் பயனர்களாகவே இருக்கின்றன. அவை வெனீர் உற்பத்திப் பொருட்களை மூலப்பொருட்களாகப் பயன்படுத்துகின்றன. ஒட்டுப்பலகை தொழிலகங்கள் 8x4x6, 8x4x12, 8x4x15, 4x4x7, 4x4x10.A, 8x4x10, போன்ற பல்வேறு அளவுகளில் அழுத்தும் திறன் கொண்ட அழுத்து இயந்திரங்கள் ஒரு மணி நேரத்திற்கு 8'x4' அளவிலான 10 ஒட்டுப்பலகைத் துண்டுகள் தயாரிக்கும். அதே நேரத்தில் 8x4x15 அளவிலான அழுத்தத் திறன் கொண்டவை ஒரு மணி நேரத்திற்கு 8'x4' அளவுள்ள 15 ஒட்டுப்பலகை தயாரிக்க முடியும். ஒட்டுப்பலகை தொழிலகங்களின் இயல்பான நிறுவப்பட்ட திறன் என்பது எண்ணிக்கை மற்றும் அழுத்தும் இயந்திரங்களின் வகையைப் பொறுத்தது. ஒவ்வொரு ஒட்டுப்பலகை அலகிலும்

நிறுவப்பட்டுள்ள அழுத்து இயந்திரங்களின் வகை மற்றும் அவற்றின் எண்ணிக்கை குறித்து மதிப்பிடப்படலாம் அதன் பின்னர், அதற்குச் சமமான எண்ணிக்கை அல்லது 8x4x10 திறன் கொண்ட அழுத்து இயந்திரங்களை கணக்கிடலாம். 8x4x10 திறன் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த ஒட்டு பலகை அலகிற்கான ஆண்டு மரத்தேவை ஆண்டுக்கு 2000 கன மீட்டராக எடுத்துக் கொள்ளப்படலாம், அதன்படி ஒட்டு பலகை அலகுகளுக்கான மொத்த மரத்தேவைகள் கணக்கிடப்படவேண்டும்."

**ஷம்பு கல்லோலிகர்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்புத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.